28 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை

அன்புள்ள பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு,

**பொருள்: 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus)**

குடும்பங்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு முழுமையான, மிகச் சிறந்தவற்றைக் கொடுக்க விரும்புகின்றன. ஆனால் தற்போதைய அன்றாட வாழ்க்கைச் செலவில் - சீருடைகள், முகாம்கள், விளையாட்டுகள், இன்னும் பலவும் - இதனுடன் சேர்க்கின்றன.

அதனால்தான் ஆலன் தொழிலாளர் அரசில் (Allan Labor Government) ஒரேமுறை வழங்கப்படும் 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையானது (School Saving Bonus) குடும்பங்களுக்கு வாழ்க்கையை நடத்துவதை சிறிது எளிதாக்குகிறது.

2025 கல்வியாண்டில் விக்டோரியா அரசுப் பள்ளியில் சேரும் ஒவ்வொரு மாணவரும் 400 டாலர்கள் ஆதரவு நிதியைப் பெறுவார்கள்.

பள்ளி சீருடைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் முகாம்கள், உல்லாசப் பயணங்கள் மற்றும் விளையாட்டுகள் போன்ற பள்ளிச் செயல்பாடுகளுக்கான செலவை இது ஈடுசெய்ய உதவும்.

நீங்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

நவம்பர் 2024 முதல், பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் 400 டாலர்கள் ஊக்கத் தொகையை எவ்வாறு பெறலாம் என்பதைக் குறித்த விவரங்களை வழங்கும் மின்னஞ்சல் ஒன்றைக் கல்வித் திணைக்களத்திலிருந்து பெறுவார்கள்.

ஒவ்வொரு குழந்தைக்கும் 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus) கிடைக்கிறது. அதாவது, பள்ளிக்குச் செல்லும் வயதுடைய மூன்று குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பம் மொத்தம் 1,200 டாலர்கள் பெறும்.

மலிவு விலையில் பள்ளிச் சீருடைகள் திட்டம் மற்றும் முகாம்கள், விளையாட்டுகள் மற்றும் உல்லாசப் பயணங்கள் நிதி உள்ளிட்ட பிற நிதி உதவிகளுடன் கூடுதலாக பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையும் (School Saving Bonus) கிடைக்கிறது.

400 டாலர்களை எதற்காகச் செலவிடலாம் என்பது பற்றியும், மற்றும் பிற உதவிகளைப் பற்றியும் மேலும் அறிந்து கொள்ள, vic.gov.au/school-saving-bonus என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

மேலும், எங்கள் குடும்பங்களிலிருந்து உங்கள் குடும்பத்துக்கு - 2025 பள்ளி ஆண்டுக்கான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

உண்மையுள்ள,

**மாண்புமிகு ஜெசிந்தா ஆலன்**
**(Jacinta Allan)**
**விக்டோரியா மாநில முதல்வர்**
**இரு குழந்தைகளின் தாய்**

**மாண்புமிகு பென் கரோல் எம்.பி.**
**(Ben Carroll MP)**
**துணை முதல்வர்**
**கல்வி அமைச்சர்**